# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

EDB SRI LANKA

**கைத்தொழில் மற்றும் தொழில்முயாற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB)**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மேசைக் கணனிகள், வர்ணம் மற்றும் மொனோக்ரோம் லேசர் அச்சுப்பொறிகள், மொனோக்ரோம் புகைப்படப் பிரதி இயந்திரங்கள், மல்டிமீடியா புரொஜெக்டர்கள் மற்றும் மல்டிமீடியா புரொஜெக்டர் திரைகள் வழங்குதல்**

**ஒப்பந்த இலக்கம்: EDB/PU/NCB/2026/05**

1. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு (EDB) மேசைக் கணனிகள், வர்ணம் மற்றும் மொனோக்ரோம் லேசர் அச்சுப்பொறிகள், மொனோக்ரோம் புகைப்படப்பிரதி இயந்திரங்கள், மல்டிமீடியா புரொஜெக்டர்கள் மற்றும் மல்டிமீடியா புரொஜெக்டர் திரைகளை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இப்போது கோரப்படுகின்றன.

2. 2024 தேசிய பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறை (NCB - ஒற்றைப் படிநிலை ஒரு உறை விலைக்கோரல் நடைமுறை) மூலம் விலைக்கோரல் நடத்தப்படும் என்பதுடன் வழிகாட்டுதல்களில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்துத் தகுதியுள்ள விலைமனுதாரர்களுக்கும் இது திறக்கப்பட்டுள்ளது.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் நேரத்தில் எந்தவொரு அரச நிறுவனத்தினாலும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினாலும் அபகீர்த்தியாளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கவோ, இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கவோ அல்லது தடை செய்யப்பட்டிருக்கவோ கூடாது.

4. தகுதியுள்ள விலைமனுதாரர்களுக்கான தகுதி அளவுகோள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் (மேலதிக தகுதித் தேவைப்பாடுகள் பெறுகை ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ளன). ஆர்வமுள்ள தரப்பினர் விலைமனு ஆவணங்களை 2026 செப்டெம்பர் 29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரை கொழும்பு 02, இல. 42, நவம் மாவத்தை, NDB-EDB கோபுரம், நிலை 6, உதவிப் பணிப்பாளர் - பெறுகை அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலும் www.srilankabusiness.com/announcements/ எனும் EDB இணையதளத்தில் ''அறிவிப்புகள்'' பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட பெறுகை ஆவணத்தை அணுகுவதன் மூலமும் விலைமனு ஆவணங்களைப் பாரீட்சித்துப் பார்க்கலாம்.

**தகுதி அளவுகோள்கள்**

**அ) பொதுவான அனுபவம்**

- விலைமனுதாரர் இலங்கையின் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக சட்டப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.
- விலைமனுதாரர் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் தொகுதி(கள்) தொடர்பான உபகரணங்களை வழங்குவதிலும் பராமரிப்பதிலும் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**ஆ) குறிப்பிடத்தக்க அனுபவம்**

- விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் தொகுதி(களுக்கு) ஒத்த தன்மையுடைய உபகரணங்களை வழங்குதல் மற்றும் பராமரித்தலுக்காக கடந்த மூன்று (03) வருடங்களில் குறைந்தபட்சம் மூன்று (03) ஒப்பந்தங்களையாவது வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். அத்தகைய ஒப்பந்தங்களை முடித்தமைக்கான சான்றுகள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களால் வழங்கப்பட்ட குறிப்பு கடிதங்கள் அல்லது திருப்திகரமான நிறைவுச் சான்றிதழ்கள் மூலம் ஆதரிக்கப்பட வேண்டும்.

**இ) நிதிக் கொள்ளளவு**

- விலைமனுதாரர் கடந்த தொடர்ந்து வந்த மூன்று (03) நிதியாண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

கொள்வனவு செய்யப்பட வேண்டிய உபகரணங்கள் மற்றும் அவற்றுக்கான விலைக்கோரல் பிணை முறித் தொகைகள் பின்வருமாறு:

| தொகுதி (Lot) | வகை (Type) | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூ.) | விலைக்கோரல் பிணை முறி (ரூ.) |
|---|---|---|---|---|
| தொகுதி 1 | மேசைக் கணனி | 20 | 3,500.00 | 60,000.00 |
| தொகுதி 2 | வர்ண லேசர் அச்சுப்பொறி<br>மொனோக்ரோம் லேசர் அச்சுப்பொறி | 01<br>05 | 1,500.00 | 10,500.00 |
| தொகுதி 3 | மொனோக்ரோம் புகைப்படப்பிரதி இயந்திரம் | 09 | 3,000.00 | 45,000.00 |
| தொகுதி 4 | மல்டிமீடியா புரொஜெக்டர்கள்<br>மல்டிமீடியா புரொஜெக்டர் திரைகள் | 05<br>04 | 2,000.00 | 36,000.00 |

6. விலைமனுதாரர் எந்தவொரு தனித் தொகுதிக்கும், தொகுதிகளின் சேர்க்கைக்கும் அல்லது அனைத்துத் தொகுதிகளுக்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு தொகுதியும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் அளவுகளில் 100% உருப்படிக்கு விலைமனுதாரர்கள் விலை குறிப்பிட வேண்டும். முழுமையற்ற தொகுதிகள் நிராகரிக்கப்படும்.

7. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு 02, இல. 42, நவம் மாவத்தை, NDB-EDB கோபுரம், நிலை 6, உதவிப் பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 011-2300702 மின்னஞ்சல்: disna@edb.gov.lk.

8. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் 7ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிடமிருந்து (EDB), 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அந்தந்த தொகுதி(களுக்கு) உரிய மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறையின்படி கட்டணம் செலுத்தப்பட வேண்டும், மேலும் தொடர்புடைய கட்டண பற்றுச்சீட்டு அல்லது பற்றுச்சீட்டின் பிரதி விலைமனுக்களுடன் இணைக்கப்பட வேண்டும். அந்தந்த தொகுதி(களுக்கு) தேவையான கட்டணம் செலுத்தியதற்கான சான்று இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

9. விலைமனுவின் மூலப்பிரதி முத்திரையிடப்பட்ட உறையில் இடப்பட வேண்டும். உறையின் மேல் இடது புற மூலையில் பின்வருமாறு தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்:

"EDB/PU/NCB/2026/05 - Supply of Desktop Computers, Colour & Monochrome Laser Printers, Monochrome Photocopy Machines, Multimedia Projectors and Multimedia Projector Screens (Lot No(s). 1 and/or 2 and/or 3 and/ or 4)"

விலைமனுதாரர் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் பொருந்தக்கூடிய தொகுதி எண்(களை) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விலைமனுதாரரின் பெயர் மற்றும் முகவரி உறையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். (விலைமனு தரவுத் தாளைப் பார்க்கவும், ITB 22.2 (c)

10. விலைமனுக்கள் 2026 செப்டெம்பர் 30ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். தாமதமாக வரும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே மு.ப. 11:15 மணிக்கு 7ஆம் மாடியில் உள்ள மினி கூட்ட அறையில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். ஒவ்வொரு விலைமனுவுடனும் 5ஆம் பந்தியில் அந்தந்த தொகுதி(களுக்கு) எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான வங்கி உத்தரவாத வடிவிலான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2026 செப்டெம்பர் 22ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு EDB 9வது மாடி கூட்ட மண்டபத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இந்த விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்கேற்கலாம்.

**தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB),**
**இல. 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு 02.**

**2026 செப்டெம்பர் 17**